முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி பகுதியில் உள்ள கழக அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 42 வது வார்டு பகுதியில் பகுதி செயலாளர் ஜி. ராஜேந்திரன் தலைமையில் வட்ட செயலாளர் சத்யா கோ. ரவி ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், பகுதி கழக செயலாளர் பேபி சேகர், ஜி. நாராயண பிரசாத், பொன் விஜயன், மற்றும் திமுக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தழிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் திரு.தா.மோ.அன்பரசன் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வி.என்.பி.வெங்கட்ராமன், ஆலந்தூர் ப.குணாளன், என்.சந்திரன், டி.பாபு, எம்.எஸ்.கே.இப்ராகிம், கோல்டு டி.பிரகாஷ், ஆர்.டி.பூபாலன், கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன், டி.ரவி, ஜெ.குமரன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், அ.வேலவன், என்.நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி—ரூ.7.5 லட்சம் மதிப்பில்

500 தூய்மைப் பணியாளர்களுக்கு சமையல் பொருள்கள்!

மின்கழக தொ.மு.ச. சார்பில் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்!

சென்னை, ஜூன் 4-

மின்வாரிய பணியாளர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வாரி வழங்கிய வள்ளல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி மின்கழகத் தொமுசவினர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். 500 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ரூ.7.5 லட்சம் மதிப்பில் சமையல் பொருள்கள் வழங்கப்பட்டன.

இது குறித்து மின்கழகத் தொ.மு.ச பொதுச்செயலாளர் / தொமுச பேரவை இணைப்பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வருமாறு :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா, மின்கழகத் தொமுசவினர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வாரி வழங்கிய வள்ளல், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா. தமிழ் நாடு முழுவதும் உள்ள திட்ட / கோட்டச் சங்கங்களில் பேரவை கொடியினை ஏற்றி இனிப்புகள் / நலத்திட்ட உதவிகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடினார்கள்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தின் முன்பு பேரவை கொடியினை ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் இனிப்புகளை வழங்கினார்.

அதன்பிறகு, தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமைச்சங்க அலுவலகத்தில் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், பொதுமக்கள் என 500 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கினார்கள்.

அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் / பொது மக்கள் மத்தியில் சங்க பொதுச்செயலாளர் (பா. மணிமாறன்) பேசினார்,

அவர் பேசியது வருமாறு:-

தமிழ்நாட்டின் 5 முறை முதலமைச்சராக பொறுப்பு வகித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வழங்கினார்கள்.

• *01.12.1969* முதல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு முதன்முதலில் ஊதிய உயர்வு *27.05.1970*ல் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

• தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் செல்ல மின்வழித்தடம் அமைத்தார்.

• மே 1 தொழிலாளர் தினம் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறையாக அறிவித்தார்.

• பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு செய்த சாதனை மட்டும் இல்லாமல், பணியாளர் இறந்தால், அவர்களது இறுதி சடங்குகளுக்காக, குடும்ப பாதுகாப்பு நிதியை ஏற்படுத்தி அவர்களது குடும்பத்தாருக்கு வழங்க உத்தரவு பிறப்பித்தவர் கலைஞர் அவர்கள். (இது எந்தொரு தொழிற்சங்கமும் வைக்காத கோரிக்கை)

• *01.12.1988* முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு *31.07.1989* வழங்கினார்கள்.

• விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி சுமார் *18000* ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டனர்.

• *01.12.1996*ம் ஆண்டு ஊதிய உயர்வில் மத்திய அரசு ஊழியர்கள் பெற்று வந்த *40* ரூ சதவிகிதம் *08.07.1998* அன்று மின்வாரிய தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

மேலும்,

• *7* ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு *1* ஆண்டுயர்வு

• *17* ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு *2* ஆண்டுயர்வு

• *27* ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு *3* ஆண்டுயர்வு

• *37* ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு *4* ஆண்டுயர்வு என வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களை மகிழ்ச்சியடைய செய்தார்.

• *7* புதிய மின்உற்பத்தி நிலையங்கள் மேட்டூர், வல்லூர், எண்ணூர் துவக்கினார்.

• *01.08.2006* ல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு *50* ரூ சதவிகிதம் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து இன்னொரு ஊதிய உயர்வு போல மின்வாரியத்தினருக்கு வழங்கினார்.

• *30.06.2007*ல் வாரியம் தொடங்கி *50* ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு அனைத்து தொழிலாளர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு மற்றும் ரூ.*1000* சன்மானம் வழங்கினார்கள். மேலும், ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ.*1000* சன்மானம் வழங்கினார் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.*500*/ சன்மானம் வழங்கினார்.

• *2010-2011* - ஒரே ஆண்டில் *77,158* இலவச வேளாண் மின் இணைப்புகளை வழங்கி சாதனைப்படைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

• *01.12.2007*ம் ஆண்டு மீண்டும் *40* ரூ ஊதிய உயர்வை மின்வாரிய பணியாளர்களும் *18.11.2009*ல் வழங்கினார்கள்.

• அதிமுக அரசால் *5* ஆண்டுக்கு என உயர்த்திய ஒப்பந்த காலம் மீண்டும் *4* ஆண்டுகள் என்று குறைத்து ஆணை பிறப்பித்தார்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

• ஆண்டுயர்வு *3* சதவிகிதமாக, அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல வழங்கப்பட்டது.

• நிலுவைத்தொகை *01.12.2007* முதலே வழங்கப்பட்டது.

• மின் பகிர்மான வட்டங்களில் / அனல்மின் நிலையங்கள் / புனல்மின் நிலையங்களில் பணியாற்றி வந்த ஒப்பந்த தொழிலாளர்கள் *73,600* பணி நிரந்தரம் செய்தார்கள்.

மேலும், அகவிலைப்படி, போனஸ் மற்றும் கருணைத்தொகை, பொங்கல் பரிசு என பல சலுகைகளை கொடுத்தார்கள்.

அனல்மின் நிலையங்கள், நீர்மின் நிலையங்கள் என பல திட்டங்களை உருவாக்கி, மின்சார துறைக்கு வளமான கட்டமைப்பை உருவாக்கி, தமிழ்நாட்டிற்கு தடையில்லா மின்சாரம் வழங்கி மின்மிகை மாநிலமாக மாற்றி, நவீன தமிழகத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் மின்கழக தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில், 1000 பேருக்கு அறுசுவை உணவை பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார், ஆர்.அருணகிரி, மு. பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் வே. முருகன், நேருநகர் எஸ் பாட்சா, கோட்டூர் கோ. சண்முகம் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டம் 74 (அ) வட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள் விழா!

மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு அசைவ உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன்.4-

74 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக இருவண்ண கொடியை ஏற்றி அறுசுவை உணவை மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு வழங்கினார்.

தமிழக மக்கள் உள்ளத்தில் வாழும் கழகத்தின் இதயம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 74அ வட்டக் கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டில் 03-06-2026 புதன் கிழமை காலை 12 மணி அளவில் சந்திரயோகி சமாதி சாலை பெரம்பூர் 74அ வட்ட கழக அலுவலகம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு கழக கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்கினார்.

74அ வட்ட கழகம் சார்பில் ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், பகுதி கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA2/BLC/BDA கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று முத்தமிழறிஞர் பிறந்தநாள் விழா வினை சிறப்பித்தனர்.

திருவொற்றியூர் மேற்கு பகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை, ஜூன்.4-

தமிழகத்தின் திசை காட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதிக் குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப் பட்டது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் நேதாஜி நகரில் *3625* *11:00* மணியளவில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது .

இந்த விழாவில் மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்று அய்யா கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

அதனை தொடர்ந்து பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

முன்னதாக 2 வட்டக் கழகத்தில் டி. சேகர் எக்ஸ் எம் சி தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கழக இருவண்ண கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

இதில் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து 4வது வட்ட கழக பொறுப்பாளர் ந.ராம்கு மார் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றத்தில் கழக இரு வண்ண கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் இ.குமரவேல் எம்.வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர்கள் ஏ. புண்ணியமூர்த்தி ந. ராம்கு மார் மாவட்ட பிரதிநிதிகள் எஸ். ஆர். மலைராஜ் மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர். நவகுமார் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்/ துணை அமைப்பாளர்கள் தழவை எஸ்.ரஞ்சித் டி. சக்கரவர்த்தி எம்.எல்.வேலன் வை.சின்னையன் வி.கே.ஏழுமலை வை.ம.கண்ணதாசன் எஸ். ராஜேஷ் மு. பாபு, ம. சுந்தர் ஆர்.நரேன்குமார், மு. ராமு, கே.சரவணன், ஜெ. மாரிமுத்து, கே. கோகுலகிருஷ்ணன் ஆர். பாலாஜி, அரவிந்தன், வி.ஹிம்மவந்த், சாமுண்டீஸ்வரி, ரேஷன் கடை குமார், பா.அஜித், ஜி. கணேஷ், டி.கார்த்திகேயன், எம்.சந்தோஷ், தே.சதீஷ், ஜி.தினேஷ், விஜி,ஜி. பூங்கொடி, புனிதா, எஸ். வினோத், ஜெ . விக்னேஷ், உதயா, எஸ்.ரமேஷ் ரோணி மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கிராம நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாமல் திரளாக பங்கேற்றனர்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்போரூர் பேரூர் செயலாளர் மு. தேவராஜ் ஏற்பாட்டில் கேக் வெட்டி அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ். ஆர்.இதயவர்மன், ஜி.சி.அன்புசெழியன், எஸ்.அஸ்கர் அலி, ஆர்.பரசுராமன், மு.க.ரவி, ஆர்.சுப்பிரமணி, எஸ்.ஏழுமலை, ஓய்.மோகன், டி.டி.சேகர், ஆ.கமலக்கண்ணன், வி.வீரபத்திரன், ஏ.குமரன், டீ. செங்குட்டுவன், மேகலா, தேவி, சிபி சக்கரவர்த்தி, எஸ்.பாலு, கே.சந்திரன், டி.பரணிதரன், எஸ்.பாஸ்கர், என்.நாகூரான், என்.சண்முகம், அப்துல், தினேஷ், எம்.பாபு, மகாலிங்கம், ராஜா, ஹரி, சசிகுமார், டி.எஸ். பாலு, பி.சுரேஷ், எம்.மோனிஷ், கே.கோபி, ஆர்.சதீஷ், கே.அரவிந்தன், எம்.பாலவிக்னேஷ், தமிழ்செல்வன், வி.சேகர், கலையரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.